**ஜூன் – 30**

**"அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி, கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங்கள் என்பேன்." - மத் 13 : 30.**

காலம் குறுகினதாயிருக்கிறது. அறுவடையின் வேலை பெரிதாயிருக்கிறது. வேலையாட்களோ கொஞ்சம், நம்முடைய சமயம் பிரதிஷ்டை பண்ணப்பட்டிருக்கிறது. ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறதென்று அறிந்து, பகற்காலமிருக்கும் மட்டும், நாம் கிரியை நடப்பிக்க வேண்டும். நாம் மரணப்பரியந்தம் நம்முடைய ஜீவனைப் பிரதிஷ்டை செய்திருக்கிறோம். அறுவடையின் பெரிய கர்த்தரால் உண்மையான "கோதுமையை" தேடவும், அதைக் களஞ்சியத்தில் சேர்க்கவும், நாம் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறோம். அற்ப காரியங்களுக்காகவோ அல்லது உலகத்தனத்துக்காகவோ அல்லது அநேக சமுதாய நலன்களுக்காகவோ செலவிட நம்மிடம் என்ன சமயமிருக்கிறது? இன்னும் சரியாகக் கூறுமிடத்து, "நல்ல உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே" என்று நம்முடைய எஜமான் தன்னுடைய திருப்தியைத் தெரிவிக்கும் பாராட்டை நாம் பெற வேண்டுமானால், இந்த திருப்தியுள்ளவர்களாயிருந்து, நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வேலையில் மனப்பூர்வமாய்ப் பங்குகொண்டு, நாம் இலக்கை நோக்கித் தொடர வேண்டும். **- Z ’00, 234 (R 2674).**

அறுவடை சமயத்தில் சுவிசேஷ யுகத்திற்குரிய வேலையின் எல்லா முந்திய பலனும் சேகரிக்கப்பட்டது. அந்த அறுவடையில் அறுக்கும் சிலாக்கியத்தைப் பெற்றவர்கள், சுவிசேஷயுகத்தின் ஆரம்பத்திலிருந்து இருந்த எல்லா நம்பிக்கையுடனும், சந்தோஷத்துடனும் தேவனுடைய ஊழியக்காரர், மற்றவர்கள் விதைத்ததையும் அறுத்தவைகளையும் களஞ்சியத்தில் சேர்த்தார்கள். விதைத்தவர்கள் அறுக்கிறவர்கள் இருவரும், அறுவடை வீட்டில் ஒருமிக்க சந்தோஷப்படுகிறார்கள். **-P ’32, 63.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

சங் 50:5; ஏசா 52:7; மல் 3:17; மத் 3:11,12; லூக் 3:17; மத் 3:11,12; லூக் 3:17; யோவா 4:34-38; வெளி 7:1-4; 14:14-16; மத் 13:41-43; 1கொரி 15:42-58.

**கோபுர வாசிப்பு : Z ’15, 269 (R 5761)**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் தேவனுடைய வசனத்தைப் பிரஸ்தாபித்தேனா? எப்படி? ஏன்? பலன்கள் என்ன?